சுற்றுநிருபம் : **04/2016**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை,
18/9 வைமன் வீதி,
நல்லூர்.

2016.07.20

வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

## கிளைமுகாமையாளர் பதவிக்கான தற்காலிக தகைமைத் தளர்வுகள்

கிளைமுகாமையாளர் பதவிக்கான நியமனத்தை மேற்கொள்ளும் போது முதலில் உள்வாரியாக விண்ணப்பங்கள் வழமை போன்று கோரப்பட வேண்டும். உள்வாரியாகத் தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மட்டும் வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும்.

1. வெளிவாரியாகவும் தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மட்டும் தகைமை குறைவாக உள்ள ஒருவரை அவர் கடமையாற்ற வல்லவர் என நெறியாளர் குழு திருப்திப்படும் பட்சத்தில் இவரை நியமிக்க நெறியாளர் குழு தனது பரிந்துரைகளுடன் அந்தந்த மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களூடாக ஆணைக்குழுவிற்கு அனுமதிக்கு அனுப்புதல் வேண்டும்.
2. இவ் விண்ணப்பங்கள் விசேட ஏற்பாட்டின் கீழ் இனி வரும் ஒரு வருடத்திற்கு மாத்திரம் கருத்தில் கொள்ளப்படும்.
3. சங்கங்கள் 6 மாதங்களுக்குள் அல்லது ஆகக் கூடுதலாக ஒரு வருடத்திற்குள் இவ் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும்.
4. இவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு பயிற்சிப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு 6 மாத கால கூட்டுறவு கனிஷ்ட தராதரக் கற்கை நெறியை பூர்த்தி செய்தல் வேண்டும்.
5. ஒரு வருட பயிற்சிக் காலத்திற்கான கொடுப்பனவு கிளை முகாமையாளர் பதவியின் அடிப்படை ஆரம்பச் சம்பளப்படிநிலைக்குச் சமமான தொகையாகும்.
6. பயிற்சிக் கால ஆரம்பத்திலேயே மற்றைய புதிய பணியாளர்களைப் போல பிணையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
7. ஒரு வருட பயிற்சிக் காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்தவர்கள் நிரந்தர கிளை முகாமையாளர்களாக பதவி நிர்ணயம் செய்யப்பட்டு அடுத்த சம்பளப்படி நிலையில் வைக்கப்பட்டு இன்னும் இரு வருட காலம் தகுதிகாண் காலமாக நிர்ணயிக்கப்படும்.
8. கிளைமுகாமையாளர்களுக்கான கிளை விற்பனை இலக்கை நெறியாளர் குழு நிர்ணயித்துக் கொடுத்து தொடர் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2016.07.15 ந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை

பிரதி : 1.கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதவிவாளரும் வட மாகாணம்.

2.வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்